# 17

# துக்கித்து அழுத ஒரு மனிதன்

## (2 இராஜாக்கள் 8:7–10:36)

*சாலொமோன், "அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு" என எழுதினார் (பிரசங்கி 3:4அ). கர்த்தர் தம் பிள்ளைகள் மகிழ்ச்சியாயிருக்கும்படி விரும்புகிறார் (சங்கீதம் 32:11; பிலிப்பியர் 4:4); ஆனால் சில நேரங்களில் துக்க மாயிருப்பது சரியாயிருக்கிறது (மத்தேயு 5:4; ரோமர் 12:15). சில நேரங்களில் மகிழ்ச்சியாயிருப்பது தவறாயிருக்கிறது.*

*எரேமியா தேவ ஜனங்களின் பாவத்தினிமித்தமும், அதைத் தொடர்ந்து எருசலேமுக்கு வரவிருந்த அழிவினிமித்தமும் அழுதார் (எரேமியா 9:1; புலம்பலின் புத்தகம்). இயேசுவானவர் தன் நண்பர் மரித்தபோது (யோவான் 11:35), எருசலேமின் அழிவைக்குறித்து சிந்தித்தபோது (லூக்கா 19:41-44), மற்றும் சிலுவையை எதிர்கொண்டபோதும் அழுதார் (எபிரெயர் 5:7). பவுல் கொரிந்தி யர்களுக்கு, "அதிகக் கண்ணீரோடு ... எழுதினார்" (2 கொரிந்தியர் 2:4).*

*இந்த பாடத்திற்கான வசனப்பகுதியில், "தேவனுடைய மனுஷன் ... அழுதான்" என வாசிக்கிறோம் (2 இராஜாக்கள் 8:11ஆ). இந்த பாடத்தில் எலிசாவின் ஆழமான செல்வாக்கை குறித்து நாம் பார்ப்போம்: அவர் அரசியல் அதிகாரமுடையவராக இருந்தார், இரண்டு நாடுகளில் அரசர்களை உருவாக்குபவராக இருந்தார். இருப்பினும், இஸ்ரவேலுக்கு நேரிடவிருந்த அழிவுக்கு முன்பாக அது ஒன்றுமில்லாமையாக இருந்தது (வசனம் 12). அவரின் முயற்சிகள் ஒரு புறம் இருந்தாலும், தேசமும் அதின் தலைவர்களும் தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்வதில் உறுதியாயிருந்தார்கள் - அது அவருடைய இருதயத்தை உடைத்தது.*

*இந்த படிப்பு 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களிலிருந்து வருகிறது. இந்த அதிகாரங்கள் எலிசாவின் பின்பகுதி ஊழியத்தை குறித்து அதிகம் கூறுகிறது. இது இஸ்ரவேலின் வரலாற்றில் ஒரு குரூரமான காலமாயிருந்தது, எந்த ஒரு இளகிய மனமுள்ளவனையும் அழச்செய்யும் சம்பவங்கள் நிறைந்திருந்தன.*

## *இரண்டு நீதியின் பட்டயங்கள் (8:7-10:36)*

### ஆசகேலின் பட்டயம்

இந்த கதையானது, "எலிசா தமஸ்குவுக்கு வந்தான்" என துவங்குகிறது (8:7ஆ). தமஸ்கு, இஸ்ரவேலின் நீண்டகால எதிரியாகிய சீரியாவின் தலை நகரமாக இருந்தது. எலிசாவை கைது செய்து, கூடுமானால் கொலை செய்ய வேண்டும் என்ற திட்டம் இந்த தமஸ்குவில் தான் தீட்டப்பட்டது (காண்க 6:8-13). இப்போது தீர்க்கதரிசி தைரியமாக அந்த பட்டணத்தில் வந்திருக்கிறார்.

அவர் ஏன் அங்கிருந்தார்? ஒரு வேளை அவர் நாகமானை சந்தித்து அவன் எடுத்த முடிவில் உறுதியாயிருக்கும்படி உற்சாகப்படுத்த முடியுமென

நம்பியிருந்தார் (5:15, 17), ஆனால் அவருடைய பிரதான நோக்கம் நீண்ட காலத்திற்கு முன் கொடுக்கப்பட்ட தெய்வீக கட்டளையை நிறைவேற்றுவதாக இருந்தது. ஓரேப் மலையில் எலிசாவுக்கு முன்னிருந்த எலியாவை நோக்கி கர்த்தர் இவ்வாறு கூறியிருந்தார்,

> நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிபோய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, ஆபெல்மெகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு. சம்பவிப்பதாவது: ஆசகேலின் பட்டயத்திற்க்குத் தப்பினவனை யெகூ கொன்று போடுவான்; யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான் (1 இராஜாக்கள் 19:15-17).

நமது தொடரின் முதல் பாடத்தில், எலியா இந்த கட்டளையின் மூன்றாவது பகுதியை நிறைவேற்றியதை நாம் பார்த்தோம்: எலிசாவை பரிசுத்த ஊழியத் திற்காக பிரித்தெடுத்ததை நாம் பார்த்தோம். எலியா ஏன் கட்டளையின் முதல் மற்றும் இரண்டாம் பகுதியை உடனே நிறைவேற்றவில்லை? அநேகமாக அவருடைய ஊழிய காலத்தில், ஆசகேல் மற்றும் யெகூவை அபிஷேகம் செய்வதற்கான காலம் கனிந்திருக்கவில்லை. இப்படியாக, அந்தப் பொருப்பு எலிசாவுக்கு வந்து சேர்ந்தது. "நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப் போய், ஆசகேலை ... அபிஷேகம் பண்ணு" என்பது முதல் கட்டளையாக இருந்தது (1 இராஜாக்கள் 19:15). இந்த கட்டளையை நிறைவேற்றுவதற்கான காலம் வந்துவிட்டது - ஆகவே எலிசா தமஸ்குவுக்கு சென்றிருந்தார்.

"சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வியாதியாயிருந்தான்" (2 இராஜாக்கள் 8:7அ). அது என்ன வியாதி என்று நமக்கு சொல்லப்படவில்லை. அது எந்த வியாதியாயிருந்தபோதிலும் அது கடுமையான, உயிருக்கு ஆபத்தான ஒன்றாக இருந்தது.

ஒரு செய்தியாளன் ராஜாவை நோக்கி, "தேவனுடைய மனுஷன் இவ்விடத்தில் வந்திருக்கிறான்" என்று அறிவித்தான் (8:7இ). முந்தைய காலமாக இருந்திருந்தால், "எலிசாவை சிறைபிடித்து - அவன் தலையை என்னிடம் கொண்டுவாருங்கள்" என ராஜா சொல்லியிருப்பான். இப்போது அவன் போர் திட்டங்களை வகுக்கக்கூடிய கடுமையான இராணுவ தளபதியாக இருக்கவில்லை. அவன் இப்போது வியாதியஸ்தனாக, வயது முதிர்ந்தவனாக இருக்கிறான். வியாதி ஒரு மனிதனுடைய கண்ணோட்டத்தை மாற்றிவிடும் (காண்க சங்கீதம் 119:71).

எலிசாவின் அற்புத வல்லமைகள் இராஜாவுக்கு தெரிந்திருந்தன; அவைகள் அவனுடைய திட்டங்களை கடந்தகாலத்தில் நாசம் செய்திருந்தன (2 இராஜாக்கள் 6:8-23). மேலும், நாகமான் தான் சுகமாக்கப்பட்ட கதையை பலமுறை சொல்லியிருக்கக்கூடும். ஆட்சியாளர் தன் நம்பிக்கைக்குரிய ஆசகேல் என்ற உதவியாளனை அழைத்தான் (தேவன் எலியாவிடம் குறிப்பிட்டிருந்த மனிதன்), அவன் ஆசகேலை நோக்கி, "நீ உன் கையிலே ஒரு காணிக்கையை

எடுத்துக் கொண்டு, தேவனுடைய மனுஷனுக்கு எதிர்கொண்டுபோ ...'' என்றான் (8:8அ).

முன்னர், ராஜா நாகமான் கொடுப்பதற்காக நிறைய உச்சிதமான பரிசுகளை அனுப்பியிருந்தார்; இப்போது அவன் தன் சொந்த பரிசு பொருட்களை அனுப்புகிறான். கொள்கையளவில், அந்த பரிசுபொருட்கள்/காணிக்கைகள் அஞ்ஞான கடவுள்களை சாந்தப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டன; நடைமுறை உண்மையில், அவைகள் கள்ள ஆசாரியர்கள் மற்றும் கள்ள தீர்க்கதரிசிகளுக்கு லஞ்சமாக கொடுக்கப்பட்டன: பொதுவாக, பரிசுப்பொருள் எந்த அளவு பெரிதாக இருந்ததோ, அந்த அளவு பரிசளிப்பவர் தனக்கு சாதகமான ''வெளிப்பாடுகளை'' பெற்று கொண்டான். ராஜாவின் பரிசுப்பொருட்களை குறித்து நான் வாசித்தபோது, எலிசா இப்படிப்பட்ட பரிசு பொருட்களை ஏற்றுக்கொள்ளும் விருப்பமுடையவர் என்பதான கேயாசியின் வேண்டுகோளை (பொய்) நாகமான் ராஜாவிடம் சொல்லியிருந்திருப்பாரா என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ராஜா ஆசகேலை நோக்கி, "நான் இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று அவனைக் கொண்டு கர்த்தரிடத்தில் விசாரிக்கச் சொன்னான்" (8:8ஆ). அநேகமாக, ராஜா ஏற்கனவே தன் அஞ்ஞான விக்கிரகங்களோடு ஆலோசனை கலந்திருந்தான் (காண்க 5:18) ஆனால் திருப்திகரமான பதிலை அவன் பெற்றிருக்கவில்லை.

ஒரு வியப்புக்குரிய பரிசு சேகரிக்கப்பட்டது. ''தமஸ்குவின் சகல உச்சிதங்களிலும் நாற்பது ஒட்டகங்களின் சுமையான காணிக்கை ..." (8:9அ). தமஸ்கு, எகிப்து, சின்ன ஆசியா மற்றும் மொசொப்பொத்தாமியா ஆகிய நாடுகளுக்கிடையிலான வணிக மையமாக இருந்தது, ஆகவே அங்கிருந்த "உச்சிதமான பொருட்கள்" உண்மையிலேயே "உச்சிதமானவைகளாயிருந்தன." விலையுயர்ந்த உலோகங்கள், மெல்லிய உடைகள், பல்வகை கலைப்பொருட்கள் மற்றும் மிகவும் ராஜபோகமான உணவு மற்றும் பானங்கள் அதில் இருந்தன. இதைவிட ஒரு சிறந்த பரிசளிப்பை கற்பனை செய்வது கடினமானதாக இருக்கும், ஆனால் அது அங்கு கொண்டு செல்லப்பட்டபோது, எலிசா அதை ஏற்றுக்கொண்டார் என்பதற்கான அறிகுறிகள் இருக்கவில்லை.

ஆசகேல் எலிசா தங்கியிருந்த இடத்தை கண்டுபிடித்தான் (8:9ஆ). அவன், "அவனுக்கு முன்பாக நின்று, சீரியாவின் ராஜாவாகிய பெனதாத் என்னும் உம்முடைய குமாரன் என்னை உம்மிடத்தில் அனுப்பி, இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று கேட்கச் சொன்னார்" என்றான் (8:9இ). "உம்முடைய குமாரன்" என்பது மரியாதையை காண்பிக்கும் ஒரு வார்த்தையாக இருந்தது, மேலும் அது சார்ந்திருத்தலையும் உணர்த்தியது.

எலிசாவின் பதில் ஆராய்ச்சியாளர்களுக்கு குழப்பமாயிருக்கிறது: "நீ போய், வியாதி நீங்கி பிழைப்பீர்[1] என்று அவனுக்குச் சொல்லும்; ஆனாலும் அவன் சாகவே சாவான் என்பதைக் கர்த்தர் எனக்கு காண்பித்தார்" என்றான் (8:10). எலிசா எந்த அர்த்தத்தில் இதை சொன்னார்? பர்ட்டன் கோப்மேன் என்பவர், அந்த வாக்கியத்தின் கடைசி பகுதி "கர்த்தரிடம்" இருந்து வந்திருப்பதாகவும், ஆனுல் முதல் பகுதி அப்படிவரவில்லை எனவும் கூறுகிறார்.[2] அவருடைய முடிவு கருத்து (மற்றும் பல எழுத்தாளர்களின் முடிவு கருத்தும்) ஆசகேல் ராஜாவிடம் என்ன பொய் சொல்ல போகிறார் என்பதை குறித்து எலிசா விழிப்புணர்வு

பெற்றிருந்தார் என்பதை காட்டுகிறது. எலிசாவின் வார்த்தைகள் இவ்விதமாக கூறப்படக்கூடும்: "நீ ராஜாவினிடத்தில் போய் அவன் நிச்சயமாக சுகமாவான் எனச் சொல் - நீ திட்டமிட்டபடியே - *ஆனால்* அவன் நிச்சயம் மரிப்பான் என கர்த்தர் எனக்கு காண்பித்துள்ளார்."

"வியாதி நீங்கி பிழைப்பேனா?" என்ற கேள்விக்கு எலிசாவின் சாத்தியமான இன்னொரு பதில் என்னவென்றால் "ஆம் மற்றும் இல்லை" என்பதாகும்: இந்த பதிலை நானும் மற்ற எழுத்தாளர்களும் தேர்ந்தெடுக்கிறோம். "*ஆம்*, உங்கள் வியாதி மரணத்திற்கேதுவானதாக இல்லாமலிருப்பதால், நீங்கள் சுகமாவீர்கள். இதுதான் உங்கள் கவலையாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் பிழைப்பீர்கள். இருப்பினும் நீ மரிப்பாய் என கர்த்தர் காண்பித்திருக்கிறபடியால், பதில் *இல்லை* என்பதாக இருக்கிறது." "வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், வியாதி முடிவைத்தரக்கூடியதல்ல, ஆனுல் ராஜாவின் வாழ்க்கை முடிவு கட்டப்படக்கூடியதாயிருந்தது."[3]

வசனம் 11 இல் வியாக்யானம் செய்வதற்கான இன்னொரு சவாலை நாம் பார்க்கிறோம். "... தன் முகத்தை திருப்பாமல் அவன் சலித்துப் போகுமட்டும் அவனை நோக்கிக் கொண்டு ..." ( 8:11அ). அந்த இரண்டு "அவன்" என்பது யாரை குறிக்கிறது என்பது தெளிவாக இல்லை. சிலர் அந்த முதல் "அவன்" என்பது "ஆசகேலை" குறிப்பதாகவும் சிலர் கருதுகிறார்கள். மற்றவர்கள் முதல் "அவன்" என்பது ஆசகேலை குறிப்பதாகவும், இரண்டாவது "அவன்" என்பது எலிசாவைப் பற்றி பேசுகிறதென்றும் உறுதிபட கூறுகிறார்கள் (காண்க NCV மொழிபெயர்ப்பு). சிலர் அந்த இரண்டு "அவன்" என்பது எலிசாவையும் குறிக்கலாம் அல்லது ஆசகேலையும் குறிக்கலாம் என கருதுகிறார்கள். முதல் சாத்தியக்கூறாக சொல்லப்பட்டது எனது தெரிவாக இருக்கிறது. CJB மொழிபெயர்ப்பில், "தேவனுடைய மனுஷன் [எலிசா] அவன் [ஆசகேல்] மேல் பார்வையை வைத்து அவன் சலித்து போகுமட்டும் நோக்கிக் கொண்டிருந்தான்" என கூறுகிறது.

இதோ ஒரு சாத்தியமான தொடர்ச்சி: எலிசா ஆசகேலிடம் பெனாதாத் மரித்துப் போவான் என கர்த்தர் உரைத்தார் என தெரிவித்தான். பின்பு அவன், ஆசகேலின்மேல் அர்த்தமுள்ள விதத்தில் தன் பார்வையை பதித்து, ராஜா *எப்படி* மரிப்பான் என்பது தனக்கு தெரிந்திருந்தது என்பதை பார்வையால் சுட்டிகாட்டினான். ஏற்கனவே ராஜாவை கொலை செய்ய திட்டமிட்டிருந்த ஆசகேல் வியப்படைந்து, எலிசாவின் கண்ணை பார்க்க இயலாதவனாக இருந்தான்.

ராஜா மரிப்பான் என்பதை எலிசா வெளிப்படுத்தியபடியால், சில எழுத்தாளர்கள் அந்த செயலுக்கு எலிசாவை (மற்றும் தேவனை) பொருப்பாளியாக்குகிறார்கள். பெனாதாத் மரிப்பான் என்பதை தேவன் அறிந்திருந்தார் என்பது உண்மைதான் (8:10). மேலும், அவர் ஆசகேல் செய்யப்போகும் கொடுமைகளையும் அறிந்திருந்தார் (8:12), அவர் இந்த இரண்டு சம்பவங்களையும் எலிசாவை கொண்டு முன்கூட்டியே அறிவிக்கும்படி செய்தார். எப்படியிருந்தாலும், தேவன் மற்றும் எலிசா ஆகிய இருவரும் இந்த தீமையான செயல்களுக்கு காரணமாய் இருந்தார்கள் என்பதோ அல்லது இதை செய்தவர்கள் தண்டனைக்கு தப்பிவிடுவார்கள் என்பதோ அதின் பொருள் அல்ல (காண்க ஆமோஸ் 1:3-5). ஒரு முந்திய பாடத்தில், ஒருவர் கடந்த

காலத்தில் என்ன செய்தார் என்பதை அவருடைய சுயாதீனத்தில் தலையிடுகிற அறிவு இல்லாமலே நான் அறிந்திருந்தேன் எனக் குறிப்பிட்டிருந்தேன். அதே விதத்தில், எல்லாவற்றையும் அறிந்திருக்கிற தேவனானவர், ஒரு நபருடைய சுயாதீனத்தில் தலையிடாமலேயே, அவன் என்ன செய்வான் என்பதை முன் கூட்டியே அறிந்தவராக இருக்கிறார்.

எலிசா மற்றும் ஆசகேல் ஆகிய இருவரும் நின்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டபோது, ஆசகேல் இஸ்ரவேலருக்கு என்னவெல்லாம் செய்வார் என்ற காட்சி எலிசாவின் மனதில் ஓடியது. அந்த சமயத்தில், "தேவனுடைய மனுஷன் அழுதான்" (8:11ஆ). அப்பொழுது ஆசகேல், "என் ஆண்டவன் அழுகிறது என்ன?" என்றான் (8:12அ). எலிசா அவனை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரருக்கு செய்யும் தீங்கை நான் அறிந்திருக்கிறபடியினால் அழுகிறேன்; நீ அவர்கள் கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்கி, அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்று, அவர்கள் குழந்தைகளை தரையோடே மோதி, அவர்கள் கர்ப்பவதிகளை கீறிப்போடுவாய்" என்றான் (வசனம் 12ஆ). இப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனங்கள் பண்டைய போர்களில் "சாதாரண" நிகழ்வுகளாக இருந்தன (காண்க 2 இராஜாக்கள் 15:16; ஓசியா 13:16).[4] இப்படியாக, "ஆசகேலின் பட்டயம்" (1 இராஜாக்கள் 19:17) கர்த்தரை விட்டு விலகினவர்கள்மேல் பயங்கரமான விதத்தில் பழிதீர்த்துக்கொள்ளும்.

அப்பொழுது ஆசகேல்: "இத்தனை பெரிய காரியத்தைச் செய்ய நாயாகிய உமது அடியான் எம்மாத்திரம்?" என்றான் (2 இராஜாக்கள் 8:13அ). சில மொழிபெயர்ப்புகள் ஆசகேல், "இப்படிப்பட்ட பயங்கரமான காரியங்களை செய்வதற்கு நான் என்ன ஒரு நாயா?" [ஒரு இழிவான மனிதன்] என்றுகேட்டதாக அர்த்தம் சொல்கின்றன (காண்க KJV; NCV). எப்படியிருந்தபோதிலும், ஆசகேல் "இத்தனை பயங்கரமான காரியங்கள்" என்று சொல்லாமல் "இத்தனை பெரிய காரியங்கள்" என்று சொன்னான். அவன் "நாய்" என்ற வார்த்தையை இழிவானவனாய் இருத்தல் என்ற அந்த அர்த்தத்தில் பயன்படுத்தாமல், முக்கியத்துவம் இல்லாதவனாயிருத்தல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தினான். REB மொழிபெயர்ப்பில், "ஆனால் நான் ஒரு நாய் ... ஒருவருமில்லாதவன் ... என்றுள்ளது." அசீரிய பதிவுகள் "ஒருவருமில்லாதவனுடைய மகன்" என்று பொருள்படும்படி குறிப்பிடுகிறது.[5]

எலிசா ஒருவேளை தன் தலையை அசைத்து, "நீ சீரியாவின் மேல் ராஜாவாவாய் என்பதைக் கர்த்தர் எனக்குத் தெரிவித்தார்" என்றான் (8:13ஆ).[6] ஆசகேல் அநேகமாக *அந்த* முன் அறிவிப்பை கேட்டதில் சந்தோஷப்பட்டான்.

ஆசகேல், எலிசாவை விட்டு புறப்பட்டு, தன் ஆண்டவனிடத்தில் வந்தபோது, "எலிசா உன்னிடத்தில் என்ன சொன்னான்?" என்று கேட்டான் (8:14அ). "நான் இந்த வியாதி நீங்கி பிழைப்பேனா?" (8:8), என்ற கேள்விக்கு, தீர்க்கதரிசியின் பதில் "ஆம் மற்றும் இல்லை" என்பதாயிருந்தது - ஆனால் ஆசகேல் ராஜாவுக்கு "ஆம்" என்ற பகுதியின் பதிலை மட்டும் கொடுத்தான்: "நீர் வியாதி நீங்கிப் பிழைப்பீர்" என்று எனக்குச் சொன்னான் (8:14ஆ).

எலிசாவின் பதிலின் "இல்லை" என்ற பகுதியானது மறுநாளில் நிறைவேற்றப்பட்டது: "மறுநாளிலே (ஆசகேல்) ஒரு சமுக்காளத்தை எடுத்து, தண்ணீரிலே தோய்த்து அவன் முகத்தின்மேல் விரித்தான்; அதினால் அவன் செத்துப் போனான்" (8:15அ). மூச்சுத்தினறி செத்துப்போனான். "சமுக்காளம்"

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை கரடுமுரடான நூலினால் நெய்யப்பட்ட ஒரு துணியை குறிக்கிறது. அது ராஜாவின் படுக்கையிலிருந்த ஒரு போர்வையை (NCV) அல்லது ஒரு தரை விரிப்பை குறிக்கலாம். ராஜா இயற்கையாக மரித்தார் என்ற ஒரு தோற்றத்தை உருவாக்கும்படி, ஆசகேல் இவ்விதமான ஒரு கொலை முறையை பயன்படுத்தினான். பெனாதாத்தின் மரணத்தை தொடர்ந்து, தமஸ்குவில் ஒரு அதிகாரப்போட்டி நிலவியது என்பதில் சந்தேகம் இல்லை; எப்படியிருப்பினும், முடிவாக, எலிசாவின் வார்த்தை உண்மையாயிற்று: "ஆசகேல் அவனுக்கு பதிலாக ராஜாவானான்" (8:15ஆ).

"ஆசகேல் சீரியாவின் வலிமையான ராஜாவாயிருந்தான் (கி.மு. 843-796/7 தோராயமாக)."[7] எலிசை முன்னுரைத்தவைகளை அவன் செய்தானா? ஆம். அதிகாரம் 8 இன் பின் பகுதியில் அவன் இஸ்ரவேல் ராஜாவோடு போர்புரிவதை பார்க்கிறோம் (8:28; காண்க 9:14). "அந்நாட்கள் முதல் கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்துபோகப்பண்ணினார்; ஆசகேல் அவர்களை இஸ்ரவேலின் எல்லைகளிலெல்லாம் முறிய அடித்து ..." என வசனம் 10:32 கூறுகிறது. குறைந்தது ஒரு சந்தர்ப்பத்தில், ஆசகேல் தன் படைகளை தென் ராஜ்யமாகிய யூதாவுக்குள் கொண்டுவந்திருந்தான் (12:17, 18).

2 இராஜாக்கள் 13 இல் "ஆகையால் கர்த்தருக்கு இஸ்ரவேல்மேல் கோபமூண்டு, அவர்களை சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலின் கையிலும் ... அந்நாட்களிலெல்லாம் ஒப்புக்கொடுத்தார்" என சுருக்கமாய் சொல்லப்பட்டுள்ளது. "யோவாகாசின் நாட்களிலெல்லாம் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேல் இஸ்ரவேலை ஒடுக்கினான்" (13:22). தேவனுடைய ஜனங்கள் தேவனோடு தங்களுக்கிருந்த உடன்படிக்கையை கைக்கொள்ளவில்லை மற்றும் அதின் விளைவுகள் பயங்கரமானவைகளாயிருந்தன.

**யெகூவின் பட்டயம்**

தேவன் எலியாவிடம் ஆசகேலை அபிஷேகம் பண்ணும்படி மட்டுமல்ல, "நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ணுபடி ..." கூறினார் (1 இராஜாக்கள் 19:16). கர்த்தர், "ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்று போடுவான் ..." என கூறியிருந்தார் (1 இராஜாக்கள் 19:17). ஆசகேல் பாவம் நிறைந்த தேசத்தை வெளியிலிருந்து தண்டிப்பான்; யெகூ பாவம் நிறைந்த மக்களை தேசத்தின் உள்ளிருந்து தண்டிப்பான். யெகூவை அபிஷேகம் பண்ணும் பொருப்பு எலிசாவின் மேல் விழுந்தது - மற்றும் அந்த பொருப்பை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது.

2 இராஜாக்கள் 8 ஆம் அதிகாரத்தின் இறுதி பகுதி யோராம் தென் இராஜ்யமாகிய யூதாவை அரசாண்டது குறித்து ஒரு சுருக்கமான தகவலை தருகிறது (8:16-23). யோராம் மரித்தபோது, அவனுடைய மகன் அகசியா ராஜாவானான் (8:24-27). அகசியா யூதாவின் ராஜாவானபோது, அவன் தென் இராஜ்யத்தில் பாகாலின் வழிபாட்டை அறிமுகப்படுத்தினான் (காண்க 8:26, 27; 11:18). இதன் பின் சில காலம் கழித்து, அவனும் இஸ்ரவேலின் ராஜாவான அவன் மாமா யோராமும், கீலேயாத்திலுள்ள ராமோத்திற்கு ஆசகேலுடன் யுத்தம் செய்ய சென்றார்கள் (8:28; காண்க 9:14ஆ), இது யோர்தானின் கிழக்கு பகுதியில் அமைந்திருந்த இஸ்ரவேலின் வலிமையான ஒரு கோட்டையாயிருந்தது (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற நாடுகள்* என்ற வரைபடத்தை காணவும்).

*யுத்தத்தின் போது, யோராம் காயமடைந்தான் (8:28).*

*யோராமின் துருப்புகள் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் இருந்துவிட்டார்கள் (காண்க 9:1-4). ராஜா யெஸ்ரயேலிலிருந்த தன் குளிர்கால அரண்மனைக்கு கொண்டு செல்லப்பட்டான் (எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்கள் என்ற வரைபடத்தை காணவும்) (8:29அ). (ஒருவேளை அவன் யெஸ்ரயேலிலிருந்த தன் தாய் யொசபேலை பார்க்கச் சென்றான் [காண்க 9:30]; நம்மில் பெரும்பாலானவர்கள் நோயுறும் போது தாயின் பராமரிப்பை விரும்புகிறோம்.) அதன் பின்னர், யோராமை பார்க்க அகசியா யெஸ்ரயேலுக்கு வந்தான் (8:29ஆ). இப்படியாக, யோராம் மற்றும் அகசியா ஆகிய இருவரும் தண்டிக்கப்படுவதற்கான களம் அமைந்துவிட்டது (காண்க 2 நாளாகமம் 22:6, 7).*

*அதிகாரம் 9 யெகூ ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுவதோடு துவங்குகிறது. நாம் வசனப்பகுதியை பார்ப்பதற்கு முன்பாக, சில பின்புலத் தகவல்கள் தேவைப்படுகின்றன. வசனம் 9:25 லிருந்து எலியா ஆகாபையும் அவன் குடும்பத்தாரையும் சபித்தபோது, யெகூ ஆகாபுடன் நாபோத்தின் திராட்சை தோட்டத்தில் இருந்தான் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம், அச்சமயத்தில் கர்த்தர் எலியாவை நோக்கி,*

> *நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சை தோட்டத்தை சொந்தமாய் எடுத்துக்கொள்ள அங்கே போயிருக்கிறான். நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார் (1 இராஜாக்கள் 21:18, 19).*

*எலியா திராட்சை தோட்டத்திற்கு வந்தபோது, ஆகாப் யெகூ மற்றும் ஒரு அதிகாரியோடு தன் புதிய திராட்சை தோட்டத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்தான் (2 இராஜாக்கள் 9:25). ராஜா எலியாவை கண்டபோது, "என் பகைஞனே, என்னைக் கண்டு பிடித்தாயா?" என்றான் (1 இராஜாக்கள் 21:20அ). அதற்கு எலியா பிரதியுத்திரமாக,*

> *கண்டு பிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய், நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியை அழித்துப்போட்டு, ஆகாபுக்கு சுவரில் நீர்விடும் ஒரு நாயாகிலும் இராதபடிக்கு இஸ்ரவேலில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சுங்கரித்து, நீ எனக்கு கோபமுண்டாக்கி, இஸ்ரவேலை பாவஞ்செய்யப் பண்ணினதினிமித்தம், உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரோபெயாமின் குடும்பத்துக்கும் [காண்க 1 இராஜாக்கள் 15-28-30], அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன் என்றார் என்று சொன்னான். யேசபேலையும் குறித்து கர்த்தர்: நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும் என்றார் (1 இராஜாக்கள் 21:20ஆ-23).*

ஆகாபின் பதிலுரைப்பு, இந்த பயங்கரமான தீர்கதரிசனத்தின் நிறைவேறுதலை தாமதப்படுத்தியது, ஆனால் அதை தள்ளிவிடவில்லை (1 இராஜாக்கள் 21:27-29).

ஆகாபின் மரணத்தை தொடர்ந்து, யெகூ ஆகாபின் மகனாகிய யோராமை சேவித்து, அதிகாரத்திற்கு வந்தான். அவன் அநேகமாக இஸ்ரவேல் படைப்பிரிவின் தலைவனாக இருந்துள்ளான் (காண்க 2 இராஜாக்கள் 9:5; NIV). 2 இராஜாக்கள் 9 ஆம் அதிகாரத்திற்கு வரும்போது, அவன் தன் படையுடன் கீலேயாதிலுள்ள ராமோத்தில் (99:1, 2) ஆசகேலுக்கு எதிராக யுத்தம் செய்துகொண்டிருந்தான் (9:14).

யெகூவை அபிஷேகம் பண்ணும் நேரம் வந்துவிட்டது, ஆனால் எலிசா தாமே அதை செய்வதற்கு ராமோத்திற்கு செல்லவில்லை. அவர் பிரயாணம் செய்ய முடியாத அளவுக்கு வயதானவராயிருந்தார் என்ற ஒரு ஆலோசனை முன் வைக்கப்பட்டு, ஆனால் அவர் அநேகமாக தன் நாற்பதுகளில் இருந்தார். மக்கள் தன்னை அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார், அது இரகசியமாய் செய்யப்படவேண்டிய அவசியம் இருந்தது. ஆகவே, அவர் "தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனை" அனுப்பினார் (9:1-3). அநேகமாக, அவர்தான் கேயாசிக்கு பதிலாக பணி அமர்ந்தவராக இருந்தார்.[8]

அந்த வாலிபன் யெகூவை கண்டுபிடித்து, மற்ற சேனாதிபதிகளிடத்திலிருந்து பிரித்து மற்றும் அவன் தலையின்மேல் தைலத்தை வார்த்தான் (9:4-6அ). கர்த்தருடைய பிரதிநிதி ஒருவரால் வட ராஜ்யமாகிய இஸ்ரவேலின் ராஜா ஒருவர் அபிஷேகம் பண்ணப்படுவதாக கூறப்படும் வசன பதிவு இது ஒன்றுதான். பின்பு, தீர்க்கதரிசி - பயிற்சியாளர் யெகூவுக்கு இந்த அச்சமூட்டும் கட்டளையை கொடுத்தார்:

> இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் உன்னைக் கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன். நான் என் ஊழியக்காரராகிய தீர்கதரிசிகளின் இரத்தப்பழியையும், கர்த்தருடைய சகல ஊழியக்காரரின் இரத்த பழியையும், யேசபேலின் கையிலே வாங்கும்படிக்கு நீ உன் ஆண்டவனாகிய ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடக்கடவாய். ஆகாபின் குடும்பமெல்லாம் அழியும்படிக்கு, நான் ஆகாபுக்குச் சுவரில் நீர் விடும் ஒரு நாய் முதலாய் இராதபடிக்கு, இஸ்ரவேலிலே அவனுடையவர்களில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் கருவறுத்து … யேசபேலை யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் தின்றுவிடும், அவளை அடக்கம் பண்ணுகிறவன் இல்லையென்கிறார் (9:6ஆ-10ஆ).

யெகூ பிரதானிகளிடத்தில் திரும்பியபோது, அவர்கள் அந்த மனிதனுடைய வேலை என்னவாயிருந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள். முதலில் யெகூ அவர்களின் கேள்விகளை தவிர்த்தான், பின்பு, "நான் உன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொன்னான்" என்றான் (9:12ஆ). மற்ற பிரதானிகள் தங்கள் புதிய ஆட்சியாளராக அவனை உற்சாகமாக ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் "எக்காளம் ஊதி: யெகூ ராஜாவானான்" என்றார்கள் (9:13ஆ). யெகூ பட்டணத்திலிருந்து யாரும்

வெளியேறி இதை யோராமுக்கு அறிவித்துவிடாதபடி எச்சரித்தான் (9:15ஆ). பின்பு, அவன் தன் இரதத்தை பூட்டி, நாற்பத்தி ஐந்து அல்லது ஐம்பத்தி ஐந்து மைல் தொலைவில் மேற்கு திசையில் உள்ள யெஸ்ரயேலுக்கு விரைந்தான் (காண்க 9:20ஆ; 9:16).

யெகூவும் அவன் கூட்டாளிகளும் யெஸ்ரயேலை நெருங்கினபோது, அவர்களை சந்திக்க ஒரு குதிரைவீரன் அனுப்பப்பட்டான் (9:17), அநேகமாக யுத்தம் எப்படி நடந்துகொண்டிருந்தது என்பதை கேட்டு தெரிந்துக் கொள்ள அவன் அனுப்பப்பட்டிருந்தான். யெகூ அவனை தன்னோடு சேர்த்துக்கொண்டு பயணித்தான் (9:18). இரண்டாவது குதிரைவீரன் அனுப்பப்பட்டான், அவனுக்கும் இதே முடிவுதான் ஏற்பட்டது (9:19, 20). இறுதியில், யோராம் ராஜாவும், அகசியா ராஜாவும் தங்கள் இரதங்களில் ஏறி யெகூவை சந்திக்க சென்றார்கள் (9:21அ). வசனம் 21 இல் உள்ள: "... *யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் நிலத்திலே அவனுக்கு எதிர்ப்பட்டார்கள்*" என்ற இந்த குறிப்பை கவனிக்க தவறிவிடாதீர்கள் (வலியுறுத்தல் என்னுடையது).

யெகூ யோராமின் மேல் அம்பு எய்து (9:24) மற்றும் தன் சேனாதிபதியாகிய பித்காரை நோக்கி:

> ... அவனைஎடுத்து, யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் வயல் நிலத்தில் எறிந்து போடு; நானும் நீயும் ஒரு சோடாய் அவன் தகப்பனாகிய ஆகாபின் பிறகே குதிரை ஏறி வருகிறபோது, கர்த்தர் இந்த ஆக்கினையை அவன் மேல் சுமத்தினார் என்பதை நினைத்துக்கொள். நேற்று நாபோத்தின் இரத்தத்தையும், அவன் குமாரரின் இரத்தத்தையும் கண்டேன் அல்லவா என்றும், இந்த நிலத்தில் உனக்கு நீதியைச் சரிக்கட்டுவேன் என்றும் அப்பொழுது கர்த்தர் சொன்னாரே; இப்போதும் அவனை எடுத்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே இந்த நிலத்தில் எறிந்துபோடு என்றான் (9:25, 26).

அகசியா ராஜா காயம் பட்டவனாய் தப்பி ஓடி, சிறிது காலம் கழித்து மரித்துப் போனான் (9:27, 28).

யெகூ யெஸ்ரயேலை வந்தடைந்தபோது, தளபதி தன் மகனை கொன்றுபோட்டான் என்ற செய்தி கெட்ட பெயரை எடுத்திருந்த யெசபேலை எட்டியது (காண்க 9:30, 31). அவள், "தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக் கொண்டு ..." (9:30ஆ). அவள் யெகூவை மயக்க/ வசப்படுத்த முடியும் என நம்பிக்கொண்டிருந்தாளா? ஒருவேளை அப்படி எண்ணியிருக்கலாம்; அவள் இளமையாக இல்லாதிருந்தபோதிலும், அநேகமாக அவள் இன்னமும் கவர்ச்சியாக இருந்தாள். அநேகமாக, அவள் ஒரு "அரசியைப் போல மரிக்க விரும்பினாள்." அவள் துக்கங்கொண்டாடுகிறவர்கள் தன் பிரேதத்தை பார்த்து, தன் அழகை பாராட்டுவார்கள் என எதிர்பார்த்தாள்.

யெகூ பட்டணத்தின் நுழைவாயிலில் பிரவேசித்தபோது, அவள் அரண் மனை ஜன்னல் வழியாய் எட்டிபார்த்து,[9] "தன் ஆண்டவனை கொன்ற சிம்ரி க்ஷேமம் அடைந்தானா?" என்றாள் (9:30இ, 31). அவள் யெகூவை "சிம்ரி" என அழைத்தாள், ஏனெனில் அவன் நாற்பத்தி ஐந்து வருடங்களுக்கு முன்பு சிம்ரி செய்ததுபோல கொலை செய்து ஆட்சியை பிடித்தான் (காண்க 1 இராஜாக்கள்

*16:8-10). அநேகமாக அதில் "சிம்ரி தற்கொலை செய்து கொண்டு சாவதற்கு முன், ஏழுநாட்கள் மட்டும் தான் அரசாண்டான், உன் கதி என்னவோ" என்ற அர்த்தத்தில் அவள் சொல்லியிருக்கலாம் (9:15).*

*இந்த நேரத்தில் அரண்மனை ஜன்னல் வழியாக சிலர் எட்டிபார்த்தார்கள். அப்பொழுது யெகூ, "என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்?" என்றான் (9:32அ). இரண்டு/மூன்று பயந்த பிரதானிகள் தலையசைத்தனர் (9:32ஆ). "அவளை கீழே தள்ளுங்கள்" என்று யெகூ கட்டளையிட்டான் (9:33அ). அதைத் தொடர்ந்து நடந்த பயங்கர காட்சி வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. "அப்படியே அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெளித்தது; அவன் [யெகூ] அவளை மிதித்துக் கொண்டு [தன் இரதம் மற்றும் குதிரைகளால்] ..." (9:33ஆ) சென்றான்.*

*அவனை எதிர்க்க ஒருவரும் இல்லாதிருந்ததால், யெகூ அரண்மனையை தன் வசம் எடுத்துக்கொண்டு, ஒரு புதிய ராஜாவாக அங்கே தன் முதல் உணவை சாப்பிட்டான் (9:34அ). அந்த உணவு அவனை ஓரளவு மென்மையானவனாக மாற்றியிருக்க வேண்டும் - ஏனெனில் யெசபேல் பேய்த்தனமான வழிகளில் நடந்திருந்தாலும் - அவள் ஒரு நல்லடக்கத்திற்குத் தகுதியானவள் என்று அவன் தீர்மானித்தான்.[10] அவன் தன் பணியாளர்களை நோக்கி, "நீங்கள் போய் சபிக்கப்பட்ட அந்த ஸ்திரியை பார்த்து, அவளை அடக்கம்பண்ணுங்கள்; அவள் ஒரு ராஜ குமாரத்தி" என்றான் (9;34ஆ). யேசபேல் சீதோனிய ராஜாவின் மகளாயிருந்தது (1 இராஜாக்கள் 16:31) மட்டுமல்ல, அவள் ஒரு ராஜாவின் மனைவியாயும், ஒரு ராஜாவின் தாயாயும், பல ராஜாக்களுக்கு பாட்டியாயும் இருந்தாள்.*

*இருப்பினும், அவர்கள் யேசபேலை அடக்கம் செய்ய சென்றபோது, "அவளுடைய தலையோட்டையும் கால்களையும் உள்ளங்கைகளையும் அல் லாமல் வேறொன்றையும் காணவில்லை" (2 இராஜாக்கள் 9:35); உடலின் பிற பகுதிகளை நாய்கள் தின்றுவிட்டன. கொடூரமான பிணந்தின்னிகள் "ஒரு செத்த மானை தின்பது போல், செத்த ராணியை விரைவாக தின்றுவிட்டன" என சிலர் கூறுகின்றனர். வேலையாட்கள் என்ன நடந்தது என்பதை கூறியபோது, யெகூ அதில் எலியாவின்,*

> *... இது கர்த்தர் திஸ்பியனாகிய எலியா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக் கொண்டு சொன்ன வார்த்தை; யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் யேசபேலின் மாம்சத்தை தின்னும் என்றும், இன்னது யேசபேலென்று சொல்லக்கூடாதபடிக்கு, யேசபேலின் பிரேதம் யெஸ்ரயேலின் நிலத்திலே வயல்வெளியின்மேல் போடும் எருவைப் போல் ஆகும் என்றும் சொன்னாரோ என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறினதை கண்டான் (9:36, 37).*

*யேசபேல் "அழகு நிலைப்பதில்லை" (நீதிமொழிகள் 31:30;* LB*) என்பதை கடினமான வழியில் கற்றுக்கொண்டாள். துக்கங்கொண்டாடுகிறவர்கள் அவள் அழகை பாராட்டும்படி அவள் உடல் பார்வைக்கு வைக்கப்படாது; அவள் உடல் ஒருபோதும் பார்வைக்கு வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்படாது.*

*இப்படியாக, யெகூ தன் இருபத்தி எட்டாண்டு கால ஆட்சியை*

*துவங்கினான் (10:36). அதிகாரம் 10ல், யெகூ எப்படி ஆகாபின் குடும்பத்தாரை கொல்லும் தன் பணியை செய்தான் மற்றும் பாகால் வணக்கத்தாரை முற்றிலும் அழித்தான் என்பது விவரிக்கப்பட்டுள்ளது. உடலை காப்பாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பையும் அடியோடு வெட்டி எடுத்துவிடுகிற ஒரு அடிப்படை அறுவை சிகிச்சையை நினைத்துக் கொள்ளுங்கள்.*

## *நான்கு சத்திய வாக்கியங்கள்*

*ஆசகேல் மற்றும் யெகூ ஆகியோரின் கதை இரத்தம் தோய்ந்த பயங்கரமான கதையாயிருக்கிறது. இதிலிருந்து நாம் என்ன சத்தியமான பாடங்களை ஆராய்ந்து அறிய முடியும்? நாம் நம் இருதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய நான்கு சத்தியங்களை நான் ஆலோசனையாக சொல்லட்டும்.*

***1. தேவனானவர் காரியங்களை கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.***

*நீங்களும் நானும் ஆசகேல் மற்றும் யெகூ ஆகியோரின் போராட்ட நாட்களில் வாழ்ந்திருந்தால், "தேவன் இது சம்பவிக்க ஏன் அனுமதிக்கிறார்?" என ஆச்சரியப்பட்டிருப்போம். 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்கள், தேவனானவர் சூழ்நிலையின் மேல் கட்டுப்பாட்டை இழப்பதற்கு பதிலாக, தேவன் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதை தெரிவிக்கின்றன. ஆசகேலும் யெகூவும் அவபக்தியுள்ளவர்களாயிருந்தபோதிலும், அவர் அவர்களை நீதியை செலுத்தும் கருவிகளாக பயன்படுத்தினார்.*

*நாம் குழப்பத்தால் சூழப்பட்டிருக்கும்போது, அதில் ஒரு காரணத்தையும் நோக்கத்தையும் பார்ப்பது கடினமானதாக இருக்கிறது. அவ்விதமான காலங்களில், "தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார்" என்பதை நினைவுபடுத்திக்கொள்வது நன்மையானதாக இருக்கும் (சங்கீதம் 47:8அ; காண்க 22:28). அவர் ஜாதிகளை பெருகவும் அழியவும் பண்ணுகிறார் (யோபு 12:23); கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார் (சங்கீதம் 33:10). எல்லாவற்றிக்கும் மேலாக, வாழ்க்கை எவ்வளவு கடினமுள்ளதாக மாறினாலும், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்ற வாக்குத்தத்தத்தை நாம் பற்றிக்கொள்ளவேண்டும் (ரோமர் 8:28).*

*காரியங்கள் ஏன் இப்படி நடக்கிறது என்பதை நாம் எப்போதும் புரிந்து கொள்ள முடியும் என நான் கூறுவதில்லை, ஆனால் தேவன் அந்த தீமையிலிருந்து நன்மை வரும்படி செய்யக்கூடியவர் என்பதை நினைவுகூருவது நமக்கு உதவி செய்கிறது. நாம் தரிசித்து நடப்பதற்குப் பதிலாக விசுவாசித்து நடப்பது சுலபமானதாயிருப்பதில்லை (காண்க 2 கொரிந்தியர் 5:7), ஆனால் நமது தேவனானவர் இன்னமும் தம் சிங்காசனத்தில் இருக்கிறார்; அவர் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.*

***2. தேவனுடைய வசனம் நிச்சயமானது.***

*தேவனுடைய வசனம் நிச்சயமானது என்ற பாடத்தை எல்லா வாசகர்களும் கற்றுக்கொள்ள வேண்டும் என பரிசுத்த ஆவியானவர் விரும்பினார்.*

*2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களில் தேவனுடைய வசனம் நிறைவேறியது என்ற செய்தி மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய தீர்க்கதரிசி எலிசா, பெனாதாத் மரிப்பான் என முன்னுரைத்தார் (8:10), அவ்விதமே அவன் மரித்தான் (8:15). எலிசா ஆசகேல் சீரியாவின் ராஜாவாக மாறுவார் என வாக்குத்தத்தம் செய்தார் (8:13), அவ்விதமே அவன் ராஜாவானான் (8:15). எலிசா, ஆசகேல் இஸ்ரவேலை ஒடுக்குவான் எனச் சொன்னார் (8:12), தீர்க்கதரிசி சொன்னபடியே அது நடந்தேறியது (காண்க 10:32, 33; 13:3, 22). எலிசா, நாபோத்திடமிருந்து பிடுங்கப்பட்ட திராட்சை தோட்டத்தில் அவனுடைய இரத்தத்திற்காக பழிவாங்கப்படும் என கூறினார் (1 இராஜாக்கள் 21:19), அது அவ்விதமே சம்பவித்தது (2 இராஜாக்கள் 9:21, 25, 26). எலியா ஆகாபிடம் அவன் சந்ததியார் எல்லாரும் அழிக்கப்படுவார்கள் என கூறினார் (1 இராஜாக்கள் 21:21), இந்த தீர்க்கதரிசனமும் அப்படியே நிறைவேறியது (2 இராஜாக்கள் 10:17).*

*யெகூவுக்கு தீமையான ஒரு நோக்கம் இருந்த போதிலும், அவன், "கர்த்தருடைய வார்த்தைகளில் ஒன்றும் தரையிலே விழவில்லை" என்று அவன் பேசியபோது, அவன் உண்மையை பேசுகிறவனாயிருந்தான் (2 இராஜாக்கள் 10:10). "தரையில் விழுவது" என்பது "அழிந்து போவது" அல்லது "நிறைவேறாமல் போவது" என்பதாயிருந்தது,* NIV *மொழிபெயர்ப்பில், "கர்த்தர் பேசினவைகளில் ... ஒரு வார்த்தைகூட ... தவறாது" என்றுள்ளது.*

*இரண்டு இராஜாக்கள் 8-10 அதிகாரங்கள், கர்த்தர் இது நடக்கும் என்று கூறும்போது, அது கண்டிப்பாக நடக்கும் என்பதை தெளிவுபடுத்துகிறது. எல்லா தீய சக்திகளும் ஒன்று சேர்ந்து சதி செய்தாலும், தேவனுடைய வார்த்தை நிறைவேறும் என்பது நிச்சயமானதாயிருக்கிறது. இது உண்மை யாயிருக்கிறபடியால் துன்மார்க்கர் அழுது புலம்புவார்கள் (காண்க மத்தேயு 7:13, 14; 1 கொரிந்தியர் 6:9-10; 16:22; கலாத்தியர் 5:19-21). இது நிச்சயமான தாயிருக்கிறபடியால், தேவபக்தியுள்ளவர்கள் மகிழ்ந்து களிகூருவார்கள் (காண்க ஏசாயா 1:18; யோவான் 14:1-3; 1 யோவான் 1:7; 3:2).*

***3. பாவத்தின் விளைவுகள் பயங்கரமானவைகளாயிருக்கின்றன.***

*பாவத்தின் விளைவுகள் பயங்கரமானவைகள் என்பது 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களின் தாக்கத்தக்க செய்தியாகவுள்ளது. சாத்தான் கீழ்ப்படியாமையின் வழியை கவர்ச்சியானதாக காட்டுகிறான்; ஆனால் முடிவில், "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது" என கர்த்தர் கூறுகிறார் (நீதிமொழிகள் 13:15;* KJV*). "மனுஷனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதிமொழிகள் 16:25). கவனமுள்ள தனிநபர்கள், கலாத்தியர் 6:7, 8அ இல் உள்ள: "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்"; என்பது உண்மையான சத்தியம் என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள்.*

பாவமானது சம்பத்தப்பட்ட பாவிக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் பயங்கரமான விளைவுகளை கொண்டுவருகிறது என்பதை மக்கள் மனதில் பதிய வைப்பதற்காக, தேவன் அவ்வப்போது தெளிவான மற்றும் உணர்ந்துகொள்ளக் கூடிய பாடங்களை கொடுத்துள்ளார். பெருவெள்ளம் ஆயிரக்கணக்கான முரட்டாட்டமுள்ள ஆத்துமாக்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களை அழித்துச் சென்றதை சிந்தியுங்கள். சோதோம் மற்றும் கொமோரா என்ற இரண்டு

*பட்டணங்கள் சுவடு தெரியாமல் முற்றிலுமாக அழிக்கப்பட்டதை பரிசீலியுங்கள். எகிப்தில் குடும்பங்களின் முதல் ஆண்பிள்ளை மரணம் மற்றும் இஸ்ரவேலரை பின் தொடர்ந்த எகிப்திய போர்வீரர்கள் செங்கடலில் மூழ்கி மாண்டதை சிந்தியுங்கள். ஆசகேல் இஸ்ரவேலரை தண்டித்தது மற்றும் யெகூ ஆகாபின் குடும்பத்தாரையும், பாகால் வழிபாட்டுக்காரரையும் அழித்தது ஆகியவை, தேவன் கீழ்ப்படியாமையை லேசானதாக எடுத்துக்கொள்வதில்லை என்பதை உணர்த்தும் கூடுதல் சம்பவங்களாக உள்ளன.*

*இரண்டு இராஜாக்கள் 8-10 அதிகாரங்கள், நாம் நமது இருதயங்களையும் வாழ்க்கையையும் சோதித்துப் பார்க்கும்படி தூண்டவேண்டும். நம்மிடத்தில் பாவம் மற்றும் முரட்டாட்டம் இருப்பதை காண்போமானால், நாம் மனந்திரும்பி, உடனே தேவனிடத்தில் திரும்ப வேண்டிய அவசியமிருக்கிறது!*

***4. நமது இருதயங்கள் தொடப்படவேண்டும்.***

*இந்த நான்காவது சத்தியம் "துக்கித்து அழுத ஒரு மனிதன்" என்ற நமது பாடத்தின் மைய கருத்துக்கு நம்மை மீண்டும் அழைத்துச் செல்கிறது. ஆண்டுகளாக, இஸ்ரவேல் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்து வந்தது. அவர்கள் தேவனை விட்டு விலகி, புற "தெய்வங்கள்" பின்னாய் சென்றுவிட்டனர். அவர்கள் பொல்லாப்பிற்கு அளவில்லாமல் போய்விட்டது. கர்த்தர் தீர்க்கதரிசிகளை அனுப்பி அவர்களை மனந்திரும்ப அழைத்தபோது, அவர்கள் தேவனுடைய செய்தியாளர்களை அவமதித்து, அவர்களில் பலரை கொலைசெய்துவிட்டனர். அவர்கள் இந்த மிகக் கடுமையான தண்டனையை தங்கள் மேல் வருவித்துக்கொண்டார்கள். இருந்த போதிலும், எலிசா அவர்கள் முடிவை அறிந்தபோது (8:12) அவர் மகிழ்ந்து, "தண்டனையின் காலம் வந்துவிட்டது, அவர்கள் தங்கள் தகுதிக்கேற்றதை பெறுகிறார்கள்!" என்று கூறவில்லை. மாறாக "தேவனுடைய மனிதர் அழுதார்" (8:11).*

*சற்று முன்னர், நான் பாவங்களின் விளைவுகளைக் குறித்து குறிப்பிட்டேன். பாவத்தின் விளைவுகளில் சில இந்த உலகத்திலேயே இருக்கின்றன (காண்க ரோமர் 1:27ஆ); பெரும்பாலானவைகள் இனிவரும் உலகத்தில் இருக்கப்போகின்றவைகளாக இருக்கின்றன (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15). துன்மார்க்கர் "எதை விதைத்தார்களோ, அதை அவர்கள் அறுக்க" நாம் காணும்போது (காண்க கலாத்தியர் 6:7, 8), அல்லது கீழ்ப்படியாதவர்கள் மேல் வரவுள்ள நித்திய தண்டனையை குறித்து நாம் வாசிக்கும் போது (மத்தேயு 7:21-23; 8:12; மாற்கு 9:47, 48; வெளிப்படுத்தின விசேஷம் 21:8), நம்முடைய பதிலளிப்பு என்னவாக இருக்கிறது? நாம் சந்தோஷப்படுகிறோமா அல்லது துக்கப்படுகிறோமா? இஸ்ரவேலருக்கு நேரிடவிருந்த தற்காலிக தண்டனையை குறித்து சிந்தித்தபோது, எலிசா அழுதாரென்றால், நாம் அன்றாடமும் எந்த மக்களை சந்திக்கிறோமோ, அந்த மக்கள் பெறப்போகும் நித்திய தண்டனையை குறித்து சிந்திக்கும் போது நாம் எத்தனை அதிகமாய் அழவேண்டும்!*

*ஒரு சபை ஊழியர் இல்லாமல் இருந்தது. அவர்கள் பல சகோதரர்கள் வந்து பிரசங்கம் செய்யும்படி அழைத்தனர். ஒரு ஞாயிற்றுக் கிழமை, ஒருவர் வந்து நரகத்தை குறித்து பிரசங்கம் செய்தார். அடுத்த ஞாயிறன்று வந்தவரும், அதே நரகத்தை குறித்தே பிரசங்கம் செய்தார். அவர்கள் இரண்டாவது நபரை தங்கள் பிரசங்கியாராக இருக்கும்படி கேட்க தீர்மானித்தார்கள். சிறிது காலம்*

சென்றபின், யாரோ ஒருவர் அவர்கள் ஏன் அந்த தெரிவை செய்தார்கள் என கேட்டார். அதற்கு அவர்கள், "முதல் பிரசங்கியார் மக்கள் நரகத்திற்குச் செல்ல இருக்கிறார்கள் என்று பிரசங்கித்தார், மற்றும் அவர் மகிழ்ச்சியாக நடந்து கொண்டார். இரண்டாவது பிரசங்கியாரும் மக்கள் நரகத்திற்கு செல்ல இருக்கிறார்கள் என்று பிரசங்கித்தார், ஆனால் அவர் துக்கமாக நடந்து கொண்டார். நாங்கள் எல்லாரும் இரண்டாவது செய்தியாளரை விரும்பி தெரிந்தெடுத்தோம்" என்றார்கள்.

எங்கோ ஒரு இடத்தில் ஒரு கருத்தரங்கு நடந்தது, அதின் தலைப்பு, "நகரத்தை நோக்கிச் செல்லும் ஒரு உலகில், வரண்ட கண்களையுடைய ஒரு சபை" என்றிருந்ததை நான் பார்த்தேன். நம்மை சுற்றிலும் இருக்கிறவர்கள் நரகத்தை நோக்கி விரைந்து செல்வதை பார்த்துக்கொண்டு, நாம் வாளாயிருப்பது சாத்தியமானதா? இயேசுவானவர் தம்மை நிராகரித்த, தம்மை சிலுவையில் அறையவிருந்த, அதே சமயத்தில் அழிக்கப்படவிருந்த அந்த எருசலேம் பட்டணத்தை பார்த்தபோது - அவர் அழுதார் (லூக்கா 19:41-44; காணவும் மத்தேயு 23:37, 38). பவுல், சிந்திக்க சாத்தியமான எல்லா பிரச்சனைகளும் நிறைந்திருந்த கொரிந்து சபைக்கு எழுதினபோது - அவர் அழுதார் (2 கொரிந்தியர் 2:4). அவன், "ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?" என்று கேட்டார் (2 கொரிந்தியர் 11:29ஆ).

நாம் இழந்துபோனவர்களைப் பற்றி கரிசனையுள்ளவர்களாக இருக்கிறோமா? நாம் அவர்களுக்காக உண்மையில் கரிசனைப்படுவோமானால், சாக்குபோக்குகளை கூறுவதை நிறுத்திவிட்டு, மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல துவங்குவோம். இதுதான் அவர்களுடைய ஒரே நம்பிக்கையாயிருக்கிறது (ரோமர் 1:16)!

## முடிவுரை

ஒரு சோகமான நிகழ்விலிருந்துகூட, ஒன்றும் கற்றுக்கொள்ளாமலிருப்பது மற்றும் எதையும் மேம்படுத்தாமலிருப்பது தான் மிகப்பெரிய சோகமாக இருக்கிறது. 2 இராஜாக்கள் 8-10 அதிகாரங்களின் சோக நிகழ்வுகளில் இருந்து, நாம் நான்கு அடிப்படை சத்தியங்களை எடுத்துள்ளோம்: (1) *தேவனானவர் காரியங்களை கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்:* நாம் அமைதியாக இருக்க வேண்டும். (2) *தேவனுடைய வசனம் நிச்சயமானது:* நாம் நம்பிக்கையோடு இருக்கமுடியும். (3) *பாவத்தின் விளைவுகள் பயங்கரமானவைகளாயிருக்கின்றன:* நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். (4) *நம் இருதயங்கள் தொடப்படவேண்டும்:* நாம் கரிசனையுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியம்.

இந்த சத்தியங்களை நாம் கற்றுக்கொள்வோமா? என்பதுதான் இப்போது நமக்கு முன்பாக உள்ள கேள்வியாக உள்ளது. மிக முக்கியமாக இவைகளின் வாயிலாக நமது ஜீவியங்கள் மேம்படுத்தப்படுமா?

---

குறிப்புகள்

[1]சில மூலப்பிரதிகளில், "நீ உண்மையிலேயே சுகமாகமாட்டாய்" என்றுள்ளது. ஆனால் "நீ சுகமாவாய்" "என்பது தெரிந்து கொள்ளப்படத்தக்க வாசிப்பாயிருக்கிறது"

(J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed. Kenneth Barker [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985], 537). [2]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings*, James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 100-102. [3]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 61. [4]Coffman added that "even today, there is no such thing as a 'kind' war" (Coffman, 103). [5]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary*, Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 214. [6]*சிலர் இந்த சந்தர்ப்பத்தில் எலிசா எண்ணையை ஊற்றி ஆசகேலை "அபிஷேகம்" செய்தார் என்று நம்புகிறார்கள், ஆனால் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை. ஆசகேலுடைய "அபிஷேகம் பண்ணப்படுதல்" என்பது எலிசா தாமே பெற்றதைப் போல இருந்திருக்கும் - தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக (வார்த்தை அல்லது செய்கையில்) "பிரித்து வைக்கப்பப்படுதலாக" இருந்தது.* [7]Wiseman, 214. [8]*"அரிதாக பாரம்பரியம் என்றழைக்கப்படக்கூடிய ரபிகளின் கதை 'அமித்தாயின் மகனாகிய யோனா' " தான் இந்த வேலைக்காரன் என்றழைக்கிறது* (G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary*, vol. 5, *1 & 2 Kings*, ed. H. D. M. Spence and Joseph S. Exell [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950], 188). [9]*"க்ஷேமம் அடைந்தானா?"* (*shalom*) *என்ற வார்த்தையில் ஒப்புரவாகுதலுக்கான ஒரு முயற்சி இருப்பதாக காண்கிறார்கள். ஆனால் பின்வரும் வார்த்தைகள் இந்த கேள்வி ஒரு வஞ்சக புகழ்ச்சியாக இருக்கும்படி எதிர்பார்க்கப்பட்டதென்ற ஆலோசனையை கொடுக்கிறது.* [10]*யேசபேல் அடக்கம் பண்ணப்படமாட்டாள் என்று தீர்க்கதரிசியின் புத்திரன் கூறியதை அவன் மறந்து போயிருந்தானா? (காண்க 2 இராஜாக்கள் 9:10.)*